RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s134

# தொல்காப்பியத்தில் அகத்திணை இலக்கியவகைக் கோட்பாடு

**சி. சதானந்தன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி), அரும்பாக்கம், சென்னை-600106. தமிழ்நாடு, இந்தியா

# Agathinai Literary Theory in Tolkappiyam

**C. Sadhanandan** [a, *]

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Arumbakkam, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author: thensadha@gmail.com

Received: 03-06-2022
Revised: 01-09-2022
Accepted: 13-09-2022
Published: 06-10-2022

Check for updates

## ABSTRACT

The Theory of the Tamil people and the theory of Tamil literature are intertwined with the agathinai and Agam traditions. Agam literature flourishes on the basis of love in Ainthinai. Seeing the proliferation of literary genres, the field of "Paatiyal" (Treatise on poetic composition) emerged in an attempt to define grammatical principles for literature. Although there are about 46 paatiyal books appearing in the Tamil world, there are only 10 paatiyal books which are available in their entirety today. Taking into account the ideas of Agathinai and Agathurai of Tolkappiyar and the views of Ilapuranar and Nachinarkiniyar, who interpreted them, the twelve pattiyals, the Venba paatiyal, the Navaneetha paatiyal, the Grammatical explanation-pattiyal, the Thonnool explanation, the Swaminatham, the Prabandha genealogy, the Prabandha deepikai, the Prabandha thirattu, and the Prabandha deepam are the types of literature created. On the basis of Agathinai and Agathurai, the grammatical principles for the literary categories such as Ainthinai Poetry, Kaikalai, Kovai, Venilmalai, Nayanappathu, Payodharappathu, Pukalchi Malai, Naamamalai, Perumakilchi Malai, Madal, Ulaamadal, Anuragamalai, Kurathipaattu, Mangala Vellai (Mangala Vallai) and Thoothu have been defined. The purpose of this article is to explain and illustrate these principles.

**Keywords:** Agathinai, Ainthinai, Tolkappiyam, Tolkappiyar

## முன்னுரை

உலகில் தமிழ் இலக்கியங்கள் தனக்கெனத் தனி முத்திரை பதித்துச் செம்மாந்து பீடுநடை போட்டு வலம்வருவதற்கு அதன் வளமார்ந்த இலக்கியங்களே காரணமாக அமைகின்றன. மொழியின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் அம்மொழியின் எண்ணிறந்த இலக்கியங்களே துணைசெய்கின்றன. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் உலகம் முழுமையும் பரந்து சிறப்புற்றமைக்கும் இம்மொழியில் காணலாகும் சங்க இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், புதுக்கவிதை சிறுகதை நாவல் எனும் நவீன இலக்கியங்கள் என்பனவான எண்ணிறந்த இலக்கியங்களே காரணமாக அமைகின்றன. ஓரிலக்கியத்திலிருந்து மற்றோர் இலக்கியம் கிளைத்தல் என்பது அதன் செறிவைக்காட்டுகிறது. தமிழ் இலக்கியங்களின் செறிவுக்கு ஐந்நூறுக்கும் மேற்பட்டுப் பரந்து விரிந்து கிடக்கின்ற சிற்றிலக்கிய வகைகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம். செவ்வியல் நூல்களுள் ஒன்றாகத் திகழும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலிருந்து அகச்சிற்றிலக்கிய வகைகளுக்கான கோட்பாடுகளைப் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கம் - பாட்டியல், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், பிரபந்த

மரபியல், பிரபந்த தீபிகை, பிரபந்தத் திரட்டு, பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் தோற்றுவித்துள்ளன.

தொல்காப்பியர் கூறும் அகத்திணை மற்றும் அகத்துறைக் கருத்துக்களையும் அவற்றிற்கு உரை கூறிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்டும் கருவாகக் கொண்டும் பாட்டியல் நூல்கள் இலக்கிய வகைகளைப் படைத்துள்ளன. இவ்விலக்கிய வகைகளுள் சில காணக்கிடைக்கின்றன. சில கிடைக்கவில்லை. தொல்காப்பியத்தையும் உரையாசிரியர்களின் உரையையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த அக இலக்கிய வகைகள் குறித்தும் அவற்றிற்கு எவ்வப் பாட்டியல் நூல்கள் இலக்கண வரையறை செய்துள்ளன என்பது குறித்தும் காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அகத்திணைகள்

அகத்திணைகள் எவை என்பதைச் சுட்ட வந்த தொல்காப்பியர்,

“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப”

என்று விதியமைத்துச் செல்கின்றார் (Ilampuranar, 2005). அஃதாவது கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை ஆகிய ஏழுதிணைகளும் அகத்திணைகளாம் என்று சுட்டிச் செல்கின்றார். இவ்வேழு திணைகளுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அன்பின் ஐந்திணைகளாகும். கைக்கிளை என்பது ஒருதலைக் காமத்தையும் பெருந்திணை என்பது பொருந்தாக் காமத்தையும் உணர்த்தும் அகத்திணைகளாகும்.

## ஐந்திணைச் செய்யுள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் அன்பின் ஐந்திணைகளுக்குரிய பாடல்களைப் பாட்டியல் நூல்கள் ‘ஐந்திணைச் செய்யுள்’ எனும் இலக்கிய வகைக்குள் அடக்கிக் காட்டுகின்றன. அஃதாவது, “ஐந்திணைக்கும் உரிய புணர்தல் முதலான உரிப்பொருள்கள் தோன்றுமாறு அன்பின் ஐந்திணைகளுக்கும் உரிய பாடல்களைப் பெற்று வருவது ‘ஐந்தினைச் செய்யுள்’ எனும் இலக்கிய வகையாம்” (என்று இலக்கண விளக்கம் - பாட்டியல் வரையறை செய்கிறது. இவ்வரையறையை அடியொற்றியே பின்னர் வந்த முத்துவீரியம், பிரபந்த தீபிகை தொன்னூல் விளக்கம் உரை பிரபந்த தீபிகை ஆகிய நான்கு பாட்டியல் நூல்களும் ஐந்திணைச் செய்யுளுக்கான இலக்கண வரையறையைச் சுட்டியுள்ளன (Gopaliyar, 1974).

## கைக்கிளை

ஒருதலைக் காமத்தைத் தொல்காப்பியர்,

“காமஞ் சாலா இளமை யோள்வயின்

ஏமஞ் சாலா இடும்பை யெய்தி

நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்

தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்

சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்

புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே”

என்னும் நூற்பாவால் விளக்குகிறார் (Ilampuranar, 2005). இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறும் முகத்தான் இளம்பூரணர், “காமம் அமையாத இளையாள் மாட்டு ஏமம் அமையாத இடும்பை எய்தி,

புகழ்தலும் பழித்தலுமாகிய இரு திறத்தால், தனக்கும் அவட்கும் ஒத்தன புணர்த்துச் சொல் எதிர்ப் பெறாதனாய்த் தானே சொல்லி இன்புறுதல் பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு" என்றும் நச்சினார்க்கினியர், "காமக்குறிப்பிற்கு அமைதியில்லாத இளமைப்பருவத்தாள் ஒருத்திகண்ணே, ஒரு தலைவன் (இவள் எனக்கு மனைக் கிழத்தியாக யான்கோடல் வேண்டுமெனக் கருதி) மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தி, தனது நன்மையும் அவளது தீமையும் என்கின்ற இரண்டு கூற்றான் மிகப்பெருக்கிய சொற்களைத் தன்னொடும் அவளொடுங் கூட்டிச் சொல்லி, அச் சொல்லுக்கு எதிர்மொழி பெறாதே பின்னுந் தானே சொல்லி இன்புறுதல், பொருந்தித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பு" என்றும் விளக்குகின்றனர் (Subramaniyan, 2013).

தொல்காப்பிய நூற்பாவும் உரையாசிரியர்களின் கருத்தும் 'காமக் குறிப்புத் தோன்றாத இளையோள்மாட்டுக் காமம் கொண்டுழலும் ஆடவன் ஒருவன், அவள் பதிலுரைக்காத போதும் தன் காமக்குறிப்பை எடுத்து மொழிந்து தனக்குத்தானே இன்புறுவது கைக்கிளையாம்' என்னும் பொருண்மையைத் தந்துள்ளன. தொல்காப்பியர், 'கைக்கிளையாம் ஒருதலைக் காமத்திற்கு உரியோன் தலைவன் மட்டுமே, கைக்கிளையுள் தலைவியின் கூற்று நிகழாது எனக்கூற, பின்னர் வந்த இலக்கணிகள் தலைவிமாட்டும் ஒருதலைக் காமம் நிகழும் என்று கூறிச் செல்கின்றனர்.

பாட்டியல் நூல்கள் ஒருதலைக் காமம் ஆணுக்கு மட்டுமல்ல பெண்ணுக்கும் உரியது என்று கூறி, பெண் காமம் கொள்ளாதவிடத்து ஆண் மட்டும் காமம் கொள்வது 'ஆண்பாற் கைக்கிளை' என்றும், ஆண் காமம் கொள்ளாதவிடத்துப் பெண் மட்டும் காமம் கொள்வது 'பெண்பாற் கைக்கிளை' என்றும் சுட்டி, கைக்கிளை அல்லது கைக்கிளைமாலை என்னும் இலக்கிய வகையை வரையறை செய்துள்ளன. பாட்டியல் நூல்களுள் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கம் - பாட்டியல், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, தொன்னூல் விளக்கம் உரை, பிரபந்த தீபம் ஆகிய எட்டுப் பாட்டியல் நூல்கள் கைக்கிளை அல்லது கைக்கிளை மாலை எனும் இவ்விலக்கிய வகைக்கு வரையறை தந்துள்ளன.

"தலைவி கூற்றில் அமைந்த கைக்கிளைப் பாடல்கள் தோன்றிய பின் இவ்வளர்ச்சி நிலையைக் கண்டுணர்ந்த பிற்கால இலக்கணிகள் கைக்கிளையைப் பல்வேறாக வகைப்படுத்தத் தொடங்கினர். அதன் பயனாகக் கைக்கிளை பலவாறாகக் கிளைத்தது. நம்பியகப்பொருள் எனும் அகவிலக்கணநூல் அகக்கைக்கிளை, புறக்கைக்கிளை என இரு வகைகளைக் காட்டும். பன்னிரு படலம் அகக்கைக்கிளை, அகப்புறக்கைக்கிளை, புறக்கைக்கிளை, புறப்புறக்கைக்கிளை என நான்காக வகுத்துரைக்கும். புறப்பொருள் வெண்பாமாலை ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படுத்தும். இவ்வாறு பிற்கால இலக்கணிகளால் விரித்துரைக்கப் பெற்ற கைக்கிளை இலக்கியங்களிடையேயும் பெரும் செல்வாக்குப் பெற்று வந்துள்ளது (Kannan, 2011)."

## அகத்துறை இலக்கியங்கள்

அகத்திணையைக் கருவாகக் கொண்டு இலக்கியங்கள் முகிழ்த்ததைப் போன்று அகத்திணைத் துறைகளையும் கருவாகக் கொண்டு பல்வேறு இலக்கியங்கள் முகிழ்ந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகியன பெரும்பான்மையாகவும் பொருளியல், உவமஇயல், மெய்ப்பாட்டியல் ஆகியன சிறுபான்மையாகவும் அகப்பொருண்மையைக் கூறுவனவாகும். இவற்றுள் காணப்பெறும் துறைகளில் நானூறைக் கோவைபோல நாடகப் போக்கில் அமைத்துப் பாடப்பெற்ற நிலையில் வளர்ச்சியுற்ற இலக்கிய வகை, கோவை எனும் இலக்கிய வகையாம்.

## கோவை

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

எனும் அகத்துறைக்கு விளக்கம் கூறும் முகத்தான் இளம்பூரணர், "நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கிய வகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல் (Ilampuranar, 2005). உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது. பாடல் சான்ற புலனெறி வழக்காவது, இவ்விருவகையானும்-பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருள்." என்றும், நச்சினார்க்கினியர், "புனைந்துரை வகையானும் உலக வழக்கத்தானும், புலவராற் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்" என்றும் கூறுகின்றனர் (Subramaniyan, 2013).

தொல்காப்பிய நூற்பாவும் உரையாசிரியர்களின் கருத்தும், 'களவு, கற்பு எனும் இவ்விரு பிரிவுகளையும் விளக்குவதாய் அவற்றிற்கு உரிய துறைகளையெல்லாம் தழுவிக்கொண்டு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனச் சொல்லப் பெற்ற அன்பின் ஐந்திணைகளின் செய்திகளை அகப்பொருள்மரபு திரியாது பாடப்பெறுவது கோவை' என்னும் பொருண்மையைத் தந்து கோவை எனும் இலக்கிய வகைக்குக் கருவாக அமைந்தன. இக் கோவை இலக்கிய வகைக்குப் பன்னிரு பாட்டியல் (221), வெண்பாப் பாட்டியல் (37), நவநீதப் பாட்டியல் (54), சிதம்பரப்பாட்டியல் (29), தொன்னூல் விளக்கம் (277), பிரபந்தந் திரட்டு (42), பிரபந்த மரபியல் (7), இலக்கண விளக்கம் - பாட்டியல் (816), முத்துவீரியம் (1042), பிரபந்த தீபிகை (8), சுவாமிநாதம் (167), பிரபந்த தீபம் (1) ஆகிய பன்னிரண்டு பாட்டியல் நூல்கள் இலக்கண வரையறை தந்துள்ளன.

## வேனில்மாலை

தொல்காப்பியர் அகப்பாடல்களில் தவறாது பயின்று வரவேண்டிய உறுப்புகளாக முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் ஆகிய மூன்றையும் சுட்டுகிறார். இவற்றுள் முதற்பொருளாவது நிலமும் பொழுதும் என விதந்தோதுகிறார். பொழுதினை பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படுத்தும் தொல்காப்பியர்,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு

முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"

என விதியமைத்து வேனிற்காலம் பாலைத்திணைக்கு உரியதென்று காட்டுகின்றார் (Ilampuranar, 2005). இந்நூற்பாவிற்கு உரைகூறும் முகத்தான் இளம்பூரணர், "நடுவுநிலைத்திணையாகிய பாலையாவது, நண்பகற்பொழுது வேனிற் காலத்தொடு புணர்ந்து நின்றவழிக் கருதிய நெறியை உடைத்து, இஃது இளவேனில் முதுவேனில் என்னும் இருவகைப் பருவத்தின் கண்ணும் வரும். நண்பகற்பொழுது காலமாம் என்பதூஉம் ஆண்டு இயங்கும் நெறி நிலமாம் என்பதூஉம் உணர்த்தியவாறு" என்றும், நச்சினார்க்கினியர், "பாலைத்திணை, காலையும் எற்பாடும் என்னும் இரு கூற்றிற்கு நடுவிணதாகிய ஒருகூறு தான் கொண்டு வெம்மை செய்து பெருகிய பெரும் பகலோடும், இளவேனிலும் முதுவேனிலும் என்னும் இரண்டினோடும், பிரிவெனப்படுதற்கு முடிவுடைத்தாகிய குறிஞ்சியும் முல்லையுமாகிய ஒரு மருங்கின்கண்ணே, ஆசிரியன் மனங்கொள்ளப்படும் நெறியையுடைத்து" என்றும் விளக்குகின்றனர் (Subramaniyan, 2013).

தொல்காப்பிய நூற்பாவும் உரையாசிரியர்களின் கருத்தும், 'இளவேனிலையும் முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுதல்' எனும் பொருண்மையைத் தந்து வேனில்மாலை எனும் இலக்கியவகைத் தோற்றத்திற்கு அடிப்படையாய் அமைந்தன. இவ்விலக்கிய வகைக்கான இலக்கணத்தை இலக்கண விளக்கம் - பாட்டியல் (833), முத்துவீரியம் (1062), பிரபந்த தீபிகை (13), பிரபந்த தீபம் (36), தொன்னூல் விளக்கம் உரை (ப.203) ஆகிய பாட்டியல் நூல்கள் வரையறை செய்துள்ளன.

## நயனப்பத்து, பயோதரப்பத்து

தலைமக்களின் விழிகள் பேசும் மொழிச் சிறப்பினைத் தொல்காப்பியர்,

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்

கூட்டி உரைக்குங் குறிப்புரை யாகும்"

என்னும் நூற்பாவில் விளக்குகிறார் (Ilampuranar, 2005). இந்நூற்பாவிற்கு உரை கூற வந்த இளம்பூரணர், "தலைமகன் கண்ணும் தலைமகள் கண்ணும் ஒருவர் வேட்கைபோல இருவர்க்கும் வேட்கை உளதாகுங் கொல்லோ எனக்கவர்ந்து நின்ற இருவரது அறிவினையும் ஒருப்படுத்தற்குத் தமது வேட்கையொடு கூட்டி ஒருவர் ஒருவருக்கு உரைக்குங் காமக் குறிப்புரையாம்" என்றும், (Ilampuranar, 2005), "தலைவன் அங்ஙனம் மக்களுள்ளாளென்று அறிந்த அறிவானே, தலைவியைக் கூட்டத்திற்கு உடம்படுத்தற்கு, தன்னுடைய நோக்கம் இரண்டானுங் கூட்டி வார்த்தை சொல்லும், அவ்வேட்கை கண்டு தலைவி தனது வேட்கை புலப்படுத்திக் கூறுங் கூற்றுந் தன்னுடைய நோக்கம் இரண்டானுமாம்." என்றும் கூறுகின்றனர் (Ilampuranar, 2005).

இவற்றினின்று காமக் கூட்டத்திற்குக் கண்ணே வாயிலாக அமைகின்றது என்பது பெறமுடிகிறது. காமக் கூட்டத்திற்கு அடிப்படையாகும் எழிலார் கண்ணைச் சிறப்பித்துப் பாடுதல் இலக்கிய வழக்காக அமைய, பாட்டியல் நூல்கள் கண்ணைச் சிறப்பித்துப் பாடும் பாடலை 'நயனப்பத்து' எனும் தனி இலக்கிய வகையாக வகுத்து வரையறையைத் தந்தன. அவ்வாறே எழிலார் தலைவியின் முலையைச் சிறப்பித்துப் பாடும் பாடல்களைப் 'பயோதரப்பத்து' எனும் தனி இலக்கிய வகையாகக் கூறி வரையறை தந்தன. நயனப்பத்து, பயோதரப்பத்து ஆகிய இவ்விரண்டு இலக்கிய வகைக்கும் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்தத் திரட்டு, சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம் - பாட்டியல், பிரபந்த தீபிகை, தொன்னூல் விளக்கம் உரை, முத்துவீரியம், பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் இலக்கண வரையறை தந்துள்ளன.

## புகழ்ச்சிமாலை, நாமமாலை

இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்த வழி, தலைவன் தலைவியின் நலத்தைப் போற்றுவது இயற்கையாதலைத் தொல்காப்பியர், களவியல் துறைகளுள் ஒன்றான, "நன்னயம் உரைத்தல்" என்னும் துறையின் வழி விளக்குகிறார். அஃதாவது தலைவியின் நலத்தைப் (எழிலழகை) போற்றுவதாம் (Ilampuranar, 2005). இப்பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு பாட்டியல் நூல்கள், 'புகழ்ச்சிமாலை' எனும் இலக்கிய வகையைத் தோற்றுவித்து வரையறை தந்தன. மேலும் இவ்விலக்கிய வகையின் எதிரொலியாக, அஃதாவது 'பெண்டிரைப் புகழ்ந்து பாடப்பெறுவது புகழ்ச்சிமாலை என்பதற்கு எதிரொலியாக ஆடவரைப் புகழ்ந்து பாடப்பெறுவது 'நாமமாலை' என்னும் இலக்கிய வகையினையும் தோற்றுவித்து வரையறையைத் தந்தன. புகழ்ச்சிமாலை, நாமமாலை ஆகிய இவ்விரண்டு இலக்கிய வகைக்கும் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம் - பாட்டியல், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் இலக்கண வரையறை தந்துள்ளன.

## பெருமகிழ்ச்சி மாலை

இயற்கைப் புணர்ச்சியிலும் இடந்தலைப்பாட்டிலும் தலைவியைப் பெற்று மகிழ்ந்த தலைவனின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் "பெற்றவழி மகிழ்ச்சி" (தொல்.பொருள்.99) என்னும் களவியல் துறைப் பொருண்மையைக் கருவாகக் கொண்டு "பெருமகிழ்ச்சி மாலை" எனும் இலக்கிய வகைத் தோற்றம் பெற்றுள்ளது. இத்துறைக்கு உரைகூற வந்த இளம்பூரணர், "இடந்தலைப் பாட்டினையொட்டி நிகழும் இன்பினைப் பெற்றவழி அகத்துத் தோற்றும் பெருமகிழ்வு" (Ilampuranar, 2005) என்றும், நச்சினார்க்கினியர், "சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி அவன் மனம் மகிழும் மகிழ்ச்சி" என்றும் கூறுகின்றனர் (Subramaniyan, 2013). தலைவியின் மாட்டு இன்பம் பெற்று மகிழ்ந்த தலைவன், தலைவியின் எழிலைப் புகழ்வது இயற்கையாம். எனவே பெண்டிரைப் புகழ்ந்து பாடும் புகழ்ச்சி மாலை எனும் இலக்கிய

வகையைப் போன்று பெருமகிழ்ச்சி மாலை எனும் இலக்கிய வகையும் தலைவியின் எழிலைப் புகழ்ந்து பாடும் பொருண்மையிலேயே அமைத்து முத்துவீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம், தொன்னூல் விளக்கம் உரை ஆகிய பாட்டியல் நூல்கள் இலக்கண வரையறை தந்துள்ளன.

“ஊர்வெண்பா, ஊர் இன்னிசை வெண்பா,

ஊர் நேரிசை வெண்பா, பெயர் இன்னிசை வெண்பா,

பெயர் நேரிசை வெண்பா, எண் செய்யுள்”

தோழி, தலைவனின் பெயரும் ஊரும் இல்லும் பிறவும் சிறப்பித்துக் கூறும் செய்திகளைத் தொல்காப்பியர் களவியல் துறையில்,

“நாடும் ஊரும் இல்லும் குடியும்

பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி

அவன்வயின் தோன்றிய கிளவியொடு”

எனும் நூற்பா வழி விளக்குகின்றார் (Ilampuranar, 2005). இந்நூற்பாவிற்கு உரை கூறும் முகத்தான் இளம்பூரணர், “நீ இத்தன்மையாகிய நாட்டையுடையை, இத்தன்மையாகிய நகரையுடையை இத்தன்மையாகிய இல்லையுடையை இத்தன்மைத்தாகிய குடிப்பிறப்பையுடையை இத்தன்மைத்தாகிய சிறப்புடையை என அவற்றின் மிகுதிபடக் கூறுதல்” என்றும், நச்சினார்க்கினியர், “அவன் பிறந்த நாடும் அதன் பகுதியாகிய குடியிருப்பும் அவ்வூர்க்கு இருப்பாகிய மனையும் பார்ப்பார் முதலிய நால்வகை வருணமும் அவ் வருணத்துள் இன்னவழி இவனென்றலும் ஒரு வயிற்றுப் பிறந்தோர் பலருள்ளுஞ் சிறப்பித்துக் கூறலும் பிறரின் ஒவ்வாதிருந்தனவாதல் நோக்கித் தலைவனிடத்தே தோழி கூறிய கிளவியோடே கூடி” என்றும் கூறுகின்றனர் (Subramaniyan, 2013).

தொல்காப்பிய நூற்பா மற்றும் உரையாசிரியர்களின் விளக்கமும் பாட்டுடைத் தலைவனின் ஊர் மற்றும் பெயர் முதலானவற்றைச் சிறப்பித்துப்பாடும் பொருண்மையைத் தந்துள்ளன. பாட்டியல் நூல்கள், பாட்டுடைத் தலைவனின் ஊரைச் சிறப்பித்து, வெண்பாவால் பாடப்பெறுவது ஊர்வெண்பா என்றும் இன்னிசை வெண்பாவால் பாடப்பெறுவது ஊர் இன்னிசை வெண்பா என்றும் நேரிசை வெண்பாவால் பாடப்பெறுவது ஊர் நேரிசை வெண்பா என்றும் ஒரே பொருண்மையில் மூன்று இலக்கிய வகைகளைத் தோற்றுவித்தன.

அவ்வாறே பாட்டுடைத் தலைவனின் பெயரைச் சிறப்பித்து, இன்னிசை வெண்பாவால் பாடப்பெறுவது பெயர் இன்னிசை வெண்பா என்றும் நேரிசை வெண்பாவால் பாடப்பெறுவது பெயர் நேரிசை வெண்பா என்றும் ஒரே பொருண்மையில் இரண்டு இலக்கிய வகைகளைத் தோற்றுவித்தன.

மேலும், பாட்டுடைத் தலைவனின் ஊரையோ பெயரையோ சிறப்பித்துரைக்கும் பொருண்மையில் பத்து முதல் ஆயிரம் வரையிலான எண்ணிக்கையில் ஏதேனும் ஓர் எண்ணளவால் பாடப்பெறுவதும், பாடிய எண்ணளவை நூற்பெயரோடு இயைபுபடுத்தி உரைப்பதும் ‘எண்செய்யுள்’ எனும் இலக்கியமாம் என்று பாட்டியல் நூல்கள் வரையறை தந்து ஊர் மற்றும் பெயரைச் சிறப்பித்துரைக்கும் பொருண்மையிலேயே மற்றுமொரு இலக்கிய வகையை உருவாக்கித் தந்தன.

இத்தகு வரையறையைப் பன்னிரு பாட்டியல் (104, 177), வெண்பாப் பாட்டியல் (36, 44), நவநீதப்பாட்டியல் (10, 41), இலக்கண விளக்கம் - பாட்டியல் (825, 830), முத்துவீரியம் (1092, 1093, 1094, 1095, 1096), பிரபந்த தீபிகை (22, 23), தொன்னூல் விளக்கம் உரை (ப.204), பிரபந்த தீபம் (16, 18, 27, 31, 62, 63) ஆகிய பாட்டியல் நூல்கள் தந்துள்ளன.

எனவே, பாட்டியல் நூல்கள் ஒரே பாடுபொருண்மையினை வெவ்வேறு யாப்பு வகைகளால் பாடப்பெறின் அவற்றை வெவ்வேறு இலக்கிய வகையாகக் கொள்ளும் தன்மையுடையன என்பதும் மேற்கூறியவற்றினின்று தெளிவாகப் பெறப்படுகிறது.

## மற்றும் சில சிற்றிலக்கிய வகைகள்

தொல்காப்பிய அகத்துறைகளையும் உரையாசிரியர்களின் உரைகளையும் அடிப்படையாகக் கொண்டும் சங்கப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டும் மேற்கண்ட இலக்கிய வகைகளைப் படைத்த பாட்டியல் நூல்கள் அகப்பொருண்மை சார்ந்து மடல், உலாமடல், அநுராகமாலை, குறத்திப்பாட்டு, மங்கல வெள்ளை (மங்கல வள்ளை), தூது ஆகிய இலக்கிய வகைகளைப் படைத்து இலக்கணக் கோட்பாடுகளை வரையறை செய்துள்ளன.

## முடிவுரை

இலக்கிய வகைகள் 96 என்ற எல்லைக்குள் அடங்குவதில்லை. பாட்டியல் நூல்கள் 244 இலக்கிய வகைகளைப் பட்டியலிட்டுச் செல்வதைப் பல ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அவை மட்டுமல்லாமல் ஏறத்தாழ ஐந்நூறுக்கும் மேற்பட்ட இலக்கிய வகைகளின் பெயர்ப் பட்டியலை இன்றைய சிற்றிலக்கிய ஆய்வாளர்கள் தொகுத்துக் காட்டுகின்றனர். இவ் இலக்கிய வகைகளுக்கான வித்துத் தொல்காப்பித்தில் விதைக்கப்பட்டிருக்கிறது என்பதை அகத்திணை இலக்கியங்களின் வழி நன்கு அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியத்தில் அகத்திணை மற்றும் அகத்துறை சார்ந்து இலக்கிய வகைக் கோட்பாடுகள் மேற்கண்டவாறு உருவாக்கப்பட்டிருப்பதைப் போன்று புறத்திணை மற்றும் புறத்துறை சார்ந்தும் இலக்கிய வகைக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தொல்காப்பிய நூலை ஆய்ந்து நோக்குவாக்குவார்க்குப் புலனாகும். எனவே பின்னாளில் வந்த சிற்றிலக்கிய வகைகளுக்கும் அதன் வளர்ச்சிக்கும் அடிப்படைத் தொல்காப்பியமே என உறுதியாகக் கூறலாம்.

## References

Gopaliyar, T.V., (1974) ilakkana vilakkam sollathikaram, Sarasvati Mahal Library, Thanjavur, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram - Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Kannan, R., (2011) Navaneethap patiyal, Appar Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V., (2013) Tholkappiyam thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License